செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 398 நாள் : 10/7/17

செய்திக்குறிப்பு

வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது :

வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களிலுள்ள அனைத்துப் பொதுத்துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் கட்டாய காலியிட அறிவிப்புச் சட்டத்தின் கீழ் மூன்று மாதத்திற்கு ஒருமுறை இ.ஆர்-1 அறிக்கையினை, வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு அறிக்கையினை அனுப்பி வைப்பது அந்தந்த நிறுவனங்களின் பொறுப்பாகும். அறிக்கை அனுப்பாத நிறுவனங்களின் மீது கட்டாயக் காலியிட அறிவிப்புச் சட்டம் 1960-ன்படி நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் வழிமுறைகள் உள்ளன.

மேற்படி, செய்திக் குறிப்பில் 30.06.2017 உடன் முடிவடைந்த காலத்திற்குரிய அறிக்கையினை இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள இ.ஆர் 1 படிவத்தில் ஆண், பெண், மொத்தம் ஆகிய விவரங்களை பூர்த்தி செய்து இவ்வலுவலகத்திற்கு அனுப்பும்படியும் மற்றும் அதே விவரத்தினை இணையதள முகவரியான www.employmentexchange.tn.gov.in/Empower–ல் உள்ளீடு செய்து தங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் அஞ்சல் முகவரியில் குறிப்பிட்டுள்ள அடையாள சொல்லான (User –ID, VLD0000000) மற்றும் கடவுச் சொல்லான "abcd@123" (Password) கொண்டு Employer Market info என்ற இடத்தில் Click செய்து ER-1 Form Entry என்ற menu-வில் சென்று Employer Details என்று குறிப்பிடப்பட்டதற்கு கீழ் Current Quarter என்ற காலத்தில் ஆண், பெண் மொத்தம் என்ற விவரத்தினை குறிப்பிட்டு அதன் கீழ் குறிப்பிட்டுள்ள கலங்களையும் பூர்த்தி செய்து save செய்ய வேண்டும்.

தற்போது தனியார் துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் 30.06.2017 முடியும் காலத்திற்கான இ.ஆர்.1 அறிக்கைகளை வேலூர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு, வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ. ராமன்., இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

5/7/17

மாவட்ட ஆட்சித்தலைவர்
வேலூர்-09.

10/7/17
செ.ம.தொ.அ.
வேலூர்- 9.